# அறநூல்கள் வெளிப்படுத்தும் கல்வியின் நோக்குநிலை

**திரு. சி. செரஞ்சன்**
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
seranjan96@gmail.com

**திரு. கு. பிரதீபன்,**
விரிவுரையாளர், கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
k.piratheepan2011@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதம் சமூகத்தில் மற்றவருடன் இணைந்து வாழ்வதற்கு கல்வி துணையாகவுள்ளது. கல்வியே மனவளர்ச்சியையும், பண்பாட்டுப் புரிதலையும், புரிந்துணர்வையும் மனிதர்களுக்கு வழங்குகின்றது. பண்டைக்காலத்தில் பள்ளிக்கல்வி முறையோ, ஏட்டறிவுக்கல்வி முறைகளோ முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. கேட்டல், உணர்தல், சிந்தித்தல், கற்றல் என்ற செயற்பாடுகளினூடாகவே மக்கள் கல்வியறிவைப் பெற்றுக்கொண்டனர். இது சமுதாயத்தில் அவன் மற்றவர்களுடன் இணைந்து வாழ்ந்ததால் பெற்றுக்கொண்ட பட்டறிவாகும். காலப்போக்கில் கல்வி வணிகமயப்படுத்தப்பட்டு பொருளாதாரத்தை ஈட்டும் கருவியாக்கப்பட்டது. இந்நிலையில் நூலறிவு முதன்மையானது. ஆனால் இது செயற்கை அறிவாகக் கருதப்பட்டது. கல்வியின் மூலமே மனிதன் சமூகமதிப்பைப் பெற்றுக்கொள்கின்றான். மன்னர்களைவிட மாசறக் கற்றோனுக்கு வழங்கப்படுகின்ற உயர்வு கல்வியினாலேயே என்பதால் கற்றல் நன்றே என்று பண்டுதொட்டு இன்றுவரை அறநூல்களும், கற்றறிந்தோரும் வலியுறுத்திவருகின்றனர்.

திறவுச்சொற்கள்: பட்டறிவு, கேள்வி, பண்பாட்டுப்புரிதல், புரிந்துணர்வு.

## கல்வியும் அறமும்

பண்டைக்காலத்தில் மனிதனின் மனவளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாகக் கருதப்பட்ட கல்வியானது, இன்று மனித வாழ்விற்கான அடிப்பை யாக மாறியுள்ளது. அதாவது ஒரு மனிதனின் பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதில் கல் முதன்மையான பங்களிப்பினை வகிக்கின்றது. ஒரு மனிதனுக்கு இன்றியமையாத உண உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள கல்வி துணை புரிகின்றது. இந்நிலையிலே கல்வியை வாழ்க்கைக்கான கருவியெனக் கூறலாம். பண்டை காலத்தில் கல்வியானது பொருளாதாரத் தேவையை நிறைவு செய்வதாகக் கருதப்ப வில்லை. மாறாக கற்றவர் வறுமை நிலையில் வாடியிருந்தனர் என்பதற்கு சங்ககால புலவர்களின் வாழ்வியல் சான்றாக அமைந்துள்ளது.

மனிதனின் சிக்கலான வாழ்க்கை முறைக்கேற்ப கல்வி என்ற கருத்துருவாக்கம் ப படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது. பழந்தமிழ் மக்கள் கல்வியினைக் கல்விக் கூட களில் மட்டும் பெற்றுக் கொள்கின்ற ஒன்றாகக் கருதவில்லைப் போலும். வாழ்க்கையி எல்லாவிடங்களிலும் எல்லா வயதிலும் ஒருவர் கல்வியினைப் பெறுவதாகவே அவர்க கருதியிருந்தனர். குழந்தை பிறப்பதற்கு முன்னரே தாயின் கருவில் இருக்கும் போதே கற் தொடங்குவதாக இந்தியத் தொன்மங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றா அர்ச்சுனனின் மகன் அபிமன்யு “சக்கர வியூகம்” என்னும் போரியல் முறையினைத் தாயி

வயிற்றிலிருக்கும் போதே பெற்றிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்வியைக் குழந்தை கருவிலிருக்கும் போதே பெற்றுக் கொள்வதாகக் கூறுவதை இன்றைய கல்வியியலாளர்கள் ஏற்பதில்லை. ஆனால் மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள், தாய் கருவுற்ற காலத்தில் மகிழ்ச்சியான சூழலிலும் உடல் நலம் மிக்க நிலையிலும் இருக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகின்றனர். தாயிடம் காணப்படும் மனவெழுச்சிகள் குழந்தையின் உளநலத்தைப் பாதிக்குமென மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கின்ற போது கல்வியறிவினை குழந்தை, தாயின் வயிற்றில் கருவுற்ற காலத்திலிருந்தே பெற்றுக் கொள்ளத் தொடங்குகின்றது எனக் கொள்ளலாம்.

அற இலக்கியங்கள் அறிவினைப் பெற்றுக் கொள்கின்ற வழிவகைகளாக கற்றல், கேட்டல், சிந்தித்தல், உணர்தல் ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்தன. இவ்வாறான வழிகளின் மூலம் கல்வியறிவினைப் பெற்றுக் கொள்கின்ற ஒருவனாலேயே அறநெறியில் அறிவு நிலையில் வாழமுடியும் என்பதனை அறநூல்கள் வலியுறுத்தியிருந்தன என்பதனை,

"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (குறள்.393)

என்ற குறளினூடாக அறிந்து கொள்ளலாம். கல்வியின் அவசியத்தை உணர்ந்த வள்ளுவர் தனது நூலின் பொருட்பாலில் இறைமாட்சி என்னும் அதிகாரத்திற்குப் பின் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்களை வைத்துள்ளார்.

கல்லாத இயல்புடைய மக்களுக்கு அறிவுடன் கூடிய ஒழுக்கநெறி ஏற்படாது என்பதனையும் அற இலக்கியங்கள் வலியுறுத்தியிருந்தன. சான்றாக,

"ஓதாதவர்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்" (நல்வழி. 91)

என்ற ஔவையாரின் கூற்றினூடாக அறியலாம். கற்றல் சார்ந்த அறிவினைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அறநெறியில் ஒழுக முடியாது என்பதே இதன் விளக்கமாகும். எனவே, அறத்தையும் கல்வியையும் பிரித்துப்பார்க்க முடியாது. அந்தவகையில் அறநூல்களில் கூறப்பட்டுள்ள அறிவின் வகைகளை,

கேட்டல் சார்ந்த அறிவு
கற்றல் சார்ந்த அறிவு
அனுபவம் சார்ந்த அறிவு

என மூன்றாக வகைப்படுத்தலாம்.

நூல்களைக் கற்பதனால் மனிதனின் சிந்தனை வளர்ச்சி பெறுகின்றது. சிந்தனை வளர்ச்சியே அறிவிற்கு அடிப்படையாக அமையப் பெற்றிருந்தது. மனிதனுக்கு சிந்தனை வளர்ச்சி ஏற்படாத வரையில் அறிவு நிலையில் அற ஒழுக்கத்தில் ஒழுக முடியாது என்பதனை வலியுறுத்தும் வகையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மனிதன் அறிவுடையவனாக இருப்பதன் அவசியத்தையும் எடுத்துக் கூறியுள்ளன.

**கேட்டல் சார்ந்த அறிவு**

பழங்காலத்தில் கேள்வி என்பது காதால் கேட்டு நாவினால் கூறல் எனப் பொருள்படும். வேதகாலக் கல்வி முறையும் காதால் கேட்டு திரும்பத் திரும்பக் கூறப்படும் மனப்பாட முறையிலேயே(பாராயணம்) அமைந்திருந்தது. அதனால் அது "காதால் கேட்டறிவது" என்னும் பொருளில் வடமொழியில் "சுருதி" எனப்பட்டது. அது தமிழில் கேள்வி என அழைக்கப்பட்டிருந்தது என்பதற்கு,

"கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்" (புறம். 361:4)

என்ற பாடலடி தக்க சான்றாகும். எழுதப்படாமல் கற்று வந்த கல்வி முறையையும் முன்னோர்கள் கேள்வியென்ற பெயரால் அழைத்திருந்தனர் என்பதற்கு,

"செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து" (குறள்.413)

என்ற குறளில் வருகின்ற "அவியுணவின் ஆன்றாரோ" என்பது வேதங்களைக் கற்று வேள்வி செய்யும் பார்ப்பனரைக் குறிக்கிறது. "செவியுணவிற் கேள்வி உடையார்" என்பது கேட்டல் கல்வியைப் பெற்ற பிறரைக் குறிப்பிடுகின்றது. ஆகவே, கேள்வி என்பது திருக்குறளில் வேதக்கல்வி என்னும் பொருளில் கையாளப்படவில்லை என்பது தெளிவாகிறது.

எழுத்துமுறை அறிமுகமில்லாத போது தோன்றிய மனப்பாடக் கல்விமுறை யானது எழுத்துமுறையும் நூலாக்க முறையும் தோன்றிய பின்னரும் வழக்கில் இருந்து வருகின்றது. நூல்களை மனப்பாடம் செய்து கற்ற பின்னர் நூலறிந்த புலவர் ஒருவரிடம் பொருள் கேட்கும் மரபு, பண்டைக்காலம் முதல் தமிழ்ச் சூழலில் நிலவி வந்திருந்தது. இவ்வாறான கல்விமரபே தமிழில் உரைநூல்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்ததெனலாம்.

இன்றைய கல்வி உலகிலும் குறிப்பாக உயர்கல்வியில் ஆசிரியர் சொல்ல மாணவர்கள் கேட்டல் என்ற விரிவுரைமுறைக் கற்பித்தலிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கேட்டலின் சிறப்பினை வலியுறுத்தும் வகையிலும் கல்விக்கும் கேள்விக்கும் உள்ள தொடர்பினைத் தெளிவுபடுத்தும் வகையிலும் வள்ளுவர் தனது நூலில் அறிவுடைமை என்ற அதிகாரத்திற்கு முன்னதாக கேள்வி என்னும் அதிகாரத்தை வைத்துள்ளார். கேள்விச் செல்வத்தையுடைய ஒருவனாலேயே அறிவுடையவனாக வாழ முடியுமென வள்ளுவர் கருதியிருந்தார் போலும். கேள்வி அதிகாரத்திலுள்ள குறள்கள் எல்லாம் கேள்வியின் சிறப்பினையும் கேட்டலால் வரும் பயன்களையும் கூறுகின்றன. சான்றாக,

"செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம் அச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை" (குறள்.411)

"கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை" (குறள்.414)

என்ற குறட்பாக்களைக் குறிப்பிடலாம். நூல்களைத் தாமே படித்து அதன் பொருளை அறிதலைக் காட்டிலும் தக்க ஆசிரியர்களிடம் முறையோடு பாடங்கேட்டு அறிந்து கொள்ளுதலே சிறந்ததாகும் என்பதனை அறநூல்கள் வலியுறுத்தியிருந்தன. சான்றாக,

"கணக்கினை முற்றப் பகலும் முனியாது இனிதோதிக்
கற்றலின் கேட்டலே நன்று" (பழமொழி நானூறு. 143)

என்ற பாடலினைக் கூறலாம். நினைவாற்றலே கேள்விக்கு அடிப்படையாக அமைந்திருந்தது. இந்நிலைமை அறநூல்களில் உயர் அறிகைத்திறன்களான பிரயோகத்திறன், பகுப்பாய்வுத்திறன், ஆக்கத்திறன் என்பன புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதற்கு சான்றாக அமைக்கின்றது.

**கற்றல் சார்ந்த அறிவு**

பண்டைய மக்கள் கல்விச் செயற்பாட்டை இரண்டாகப் பிரித்திருந்தனர். அவை கல்வி என்றும் கேள்வி என்றும் அழைக்கப்பட்டிருந்தன. இவற்றில் கல்வி என்பதில் கண்ணால் பார்த்து நாவினால் கூறுதலையே கருதியிருந்தனர். தேவையை ஒட்டியே அக்காலக் கல்வி நடவடிக்கைகள் அமையப் பெற்றிருந்தன. அந்தவகையில் பிராமணர்களின் கல்வி என்பது வாழ்க்கைத் தேவையாக, அதாவது அவர்கள் உணவுத் தேவையை தீர்ப்பதற்காக வேதங்களைக் கற்றனர். வேதங்களைக் கற்றதனால் கிடைக்கப் பெற்ற அறிவினால் வேள்விகள் செய்து பிராமணர்கள் தமது வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்தனர். வாழ்க்கைத் தேவைக்கான இக்கல்வியே பிற்காலத்தில் பயன் கொள்வாதக் கல்வி முறைமையாகப் பரிணமித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி வாழ்க்கைக்கான தேவையாக பிறசமூகப் பிரிவினருக்கு தொடக்க காலத்தில் அமைந்திருக்கவில்லை. பிற்பட்ட காலப்பகுதிகளில் வணிகவர்க்கத்தினருக்கு கல்வி வாழ்க்கைக்கான தேவையாக மாற்றம் பெற்றிருந்தது. அதாவது வணிகச் செயற்பாடுகளின் வளர்ச்சியினால் பண்டமாற்றிலிருந்து பண்டத்திற்குப் பதிலாகப் பொருள் (நாணயம்) வழங்கும் முறை வந்த சூழலில், கணக்குப் பார்த்தல், குறித்து வைத்தல் முதலான செயற்பாடுகள் இயல்பாகத் தோன்றலாயின. மேலும், வணிகச் செயற்பாடுகளினால் வணிகர்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்ட போது வர்த்தக ஒப்பந்தங்களை வாய்வழியாக மேற்கொண்டனர். அதனால் அவற்றில் தவறுகள் நிகழ்ந்தமையாலும் அவற்றை எழுத்து வடிவில் பதிவு செய்து வைக்க வேண்டிய தேவையும் வணிக வர்க்கத்தினருக்கு உருவாகியிருந்தது. இவ்வாறான சூழலில் வணிகர்கள் எழுத்துக் கல்வியைக் கற்கத் தலைப்பட்டனர். எழுத்துக் கல்வியைக் கற்றமையினால் வணிக வர்க்கம் பொருளாதாரத்திலும் சமூகநிலையிலும் மிகவும் உயர்ந்த இடத்திலிருந்தது. இதனால் கற்றல் என்பது எழுத்து முறைக் கற்றலாக மாற்றமடைந்திருந்தது. இந்நிலையில் அற இலக்கியங்களும் எண்ணினையும் எழுத்தினையும் வாழும் உயிர்களின் கண்ணாகக் குறிப்பிட்டிருந்தன. சான்றாக,

> "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள். 392)

> "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" (கொன்றைவேந்தன்.)

> "எழுத்தினைக் கல்லாமை தீது" (சிறுபஞ்சமூலம். 50)

> "எழுத்தினை யொன்றும் உணராத ஏழையும்" (திரிகடுகம். 92)

> "எழுத்து அறிவித்தவன் இறைவனாவான்" (வெற்றிவேற்கை. 01)

> "இடை வனப்பும் தோள் வனப்பும் ஈடின் வனப்பும்
> நடை வனப்பும் நாணின் வனப்பும் புடைசால்
> கழுத்தின் வனப்பும் வனப்பு அல்ல. எண்ணோடு
> எழுத்தின் வனப்பே வனப்பு" (ஏலாதி. 74)

இவ்வெழுத்துக் கல்வி நூற்கல்வியாக மாற்றம் பெற்ற போது நூற்கல்வியினால் கிடைக்கப்

பெற்ற அறிவினை "செயற்கை அறிவென" உரையாசிரியர்கள் பலரும் பொருள் கொண்டிருந்தனர்.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்" (குறள். 373)

என்னும் நூற்பா உரையில் பரிமேலழகர் "நுண்ணிய நூல்பல கற்பினும்" என்ற அடிக்குப் பொருள் கூறும் போது, "செயற்கையினாய அறிவு" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இக்கருத்தை வலுப்படுத்தும் வகையில் பரிப்பெருமாளும்,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு" (குறள்.383)

என்ற குறளின் உரையிலே கல்வி முதலானவற்றை "இது முதலாகச் செயற்கைக்குணம்" எனக் கூறியுள்ளார். கல்வியினைச் செயற்கை அறிவு என்பதால் "இயற்கை அறிவு" என ஒன்றுள்ளது எனக் கருத இடமுள்ளது என்பதனை,

"மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை" (குறள். 636)

என்னும் குறளில் "மதிநுட்பம்" என்னும் தொடர் "இயற்கை அறிவையும்", "நூல்" என்னும் சொல் "செயற்கை அறிவையும்" குறிக்கப் பயன்பட்டுள்ளது எனக் கருதலாம். இவ்வாறான கருத்தினையே உரையாசிரியர்களும் கொண்டிருந்தனர் என்பதனை,

பரிமேலழகர் உரை

"இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடையராய் அமைச்சர்க்கு...."

காளிங்கர் உரை

"தம் பிறவிக்கண்ணே இயற்கையாக விதிவழி வாய்ந்த மதியின் கூர்மையைப் பின்னும் தெளியக் கற்று உணர்ந்த செயற்கைத் தன்மை நூலோடு கூட உடையவராகிய நுண்ணறிவாளர்க்கு"

இவ்வாறு "இயற்கை அறிவு", "செயற்கை அறிவு" எனப் பெயரிட்டுப் பிரித்துப் பார்க்கும் தன்மைக்கு திருக்குறளே காரணமாக அமைந்திருந்தது. சான்றாக,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்" (குறள். 637)

என்ற குறளில் "செயற்கை அறிதல்", "இயற்கை அறிதல்" என்னும் சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. இதிலிருந்து பிறவியிலேயே ஒவ்வொரு உயிரிடத்தும் இயல்பாக அமைந்திருக்கும் அறிவினை "இயற்கை அறிவென்றும்" கற்றலினால் கிடைக்கப் பெறுகின்ற நூலறிவினை "செயற்கை அறிவென்றும்" பழந்தமிழ் இலக்கியங்கள் கருதியிருந்தன போலும். ஒருவரின் நுண்மதியைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாக பரம்பரைக் காரணி அமைகின்றது எனும் தற்போதைய கருத்துநிலையும் இதற்குச் சான்றாக அமைகின்றது.

**அனுபவம் சார் அறிவு**

அனுபவம்சார் அறிவுத் தொகுதியை நேரடி அனுபவம்சார்ந்தது, மறைமுக அனுபவம்சார்ந்தது எனப் பொதுவாக இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். இவ்விருவகை அனுபவங்களிலும் கிடைக்கப் பெறுகின்ற பார்த்தறிதல், கேட்டறிதல் என்ற அறிதல் நிலைகளே தொடக்ககாலங்களில் அறிவாகக் கருதப்பட்டிருந்தது என்ப

தனை, "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்ற முதுமொழியூடாக அறிந்து கொள்ள லாம். அனுபவ அறிவும், கேள்வி அறிவும் தனிமனித மற்றும் சமூக மேம்பாட்டுக்குப் பெரிதும் துணைநிற்பனவாகும். இந்நிலையிலே தொல்காப்பியரும் கல்வியை இரண்டு வகையாகப் பிரித்திருந்தார் என்பதனை,

"வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு
ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்" (தொல். பொருள். அகம். 44:12)

என்னும் நூற்பாவில் அறியலாம். இதில் வருகின்ற "வாயினும் கையினும் வகுத்த பக்கம்" என்பதற்கு விளக்கமளிக்கும் போது இளம்பூரணர், வாயின் வகுத்த பக்கமாவது ஓதுதல், "கையின் வகுத்த பக்கமாவது" படைக்கலம் பயிற்றலும் சிற்பம் கற்றல் முதலான தொழிற் கல்விகளைக் குறித்து நிற்கின்றதெனக் கூறியுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டே தமிழ் இலக்கண நூல்கள் கல்வியினை மக்களுக்குரிய தொழில் சார் கல்வியாகக் கருதியிருந்தன.

தொடக்ககாலத்தில் மனித இனம் உணவைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறையை அறிதலையே முதன்மையாகக் கொண்டிருந்தது. இதனால் மனித இனத்தின் சமூகச் செயற்பாடுகளே கல்வியாக இருந்தமையினால் தனிப்பட்ட "கல்வி" அமைப்புக்கள் எவையும் தொடக்ககாலத்தில் முக்கியம் பெறவில்லையெனக் கருதலாம். எழுத்துக் கல்வி வழக்கத்திற்கு வருமுன் தொழில் சார் அறிவைப் பெறுதலே கல்வியாகக் கருதப் பட்டிருந்தது. தொழில்முறைக் கல்வி என்பது கண்ணால் பார்த்துக் கற்றல் என்ற நிலை யிலே அமைந்திருந்தது. அதாவது தொழில் புரியும் களங்களில் இளையவர்கள் மூத்தவர் களுக்கு உதவுதல் மூலம் தொழில்சார் அறிவினைப் பெற்றுக் கொண்டனர். இக்கற்றல் முறையில் ஏற்படும் தவறுகளை மூத்தவர்கள் திருத்தினர். இவ்வாறு அனுபவம் சார் அறிவைப் பெறுவதே தொடக்க காலத்தில் கல்வியாக இருந்திருக்க வேண்டும்.

இன்றைய நிறுவனமயப்பட்ட கல்வியமைப்பில் இருக்கும் இறுக்கமான கட்டுப்பாடுகளோ, வரையறைகளோ அன்றைய கல்விச் செயற்பாடுகளில் நிலவவில்லை யெனக் கருதலாம். இவ்வாறு நிலவி வந்த கல்வி மரபானது நவீன கல்விச் சிந்தனையை ஏற்று வளர்ச்சியடைந்தமையினால் "எழுத்தறிதலே கல்வி" என்ற நிலைக்கு வந்திருந்தது. இதன் அடிப்படையிலே கல்வியின் கருத்துருவாக்கமும் வளர்ச்சி கண்டிருந்தது. இன்றைய மனிதன் பெற்றிருக்கும் அறிவு என்பது ஒரு தனிபட்ட மனிதனுடையது அன்று. அது மனித குலத் தோற்றத்திலிருந்து பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடேயாகும் என்பதனை,

> "அன்றாடக் குடும்ப வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் நேர்ந்த வேலை, விளை யாட்டு, சடங்குகள், விழாக்கள் போன்றவையே மனிதன் கற்பதற்கான வாய்ப்புகளாக அமைந்தன. தாயின் அன்பான அரவணைப்பிலிருந்தும் வேட்டையாடும் தந்தையின் செயல்களிலிருந்தும் பருவமாறுதல்கள், பழகிய உயிரினங்கள், முதலியவற்றைக் கவனித்தும் மூத்தோர்கள் சொன்ன கதைகளையும் மந்திர சூனிய மதகுருக்களின் இசைப்பாட்டுக்களையும் கேட்டு மனிதன் கல்வி கற்றான்." (வடிவேலு.எஸ்., ப. 06)

மனித வாழ்வியற் காலத்திலிருந்து நிகழ்ந்து வரும் பண்புசார் நடத்தைகளே கல்வியாக பிற்காலத்தில் உருவம் கொண்டது எனக் கூறலாம்.

இன்று கல்விப் பிரிவுகள் பல்வேறு துறைகளாக வளர்ச்சி பெற்றுள்ளன. சமூகத்தைப் பற்றிப் பயில்வது சமூக அறிவியல் எனவும் அரசியலைப் பற்றிப் பயில்வது அரச அறிவியல் எனவும் மொழியைப் பற்றிப் பயில்வது மொழியியலெனவும் அழைக்கப்

படுகின்றன. இவ்வாறு இன்றைய காலப் பகுதியில் கல்விப் பிரிவுகள் பல்வேறு அறிவியல் துறைகளாக வளர்ச்சி நிலையை அடைந்துள்ளன.

**அறிவுடையாரின் சமூக மதிப்பு**

விலங்கோடு விலங்காகத் தோன்றிய மனிதன் அறிவு வளர்ச்சியினால் படிப் படியாக அவற்றிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்ட நிலையில், தனக்கெனத் தனித்துவமான பண்பாட்டினை, பழக்கவழக்கத்தை, நடைமுறைகளைக் கடைப்பிடிக்க முயன்றிருந்தான். இந்நிலையிலே மனிதன், நாகரிகம் பெற்றவனாக மாற்றமடைந்தான். மக்கள் நாகரிகம் அடையத் தொடங்கிய பின்னர், அவர்களைச் சமூகத்திற்குப் பயன்பாடுடையவர்களாக மாற்றுவதே "கல்வி" எனக் கருதப்பட்டிருந்தது. இத்தகைய மனித வளர்ச்சியினை தொல்காப்பியர் மனித இனம் ஐந்தறிவு நிலையிலிருந்து ஆறறிவு பெற்று வளர்ச்சியடைந்த நிலையாகக் கருதியிருந்தார் என்பதனை,

"மாவும் மாக்களும் ஐயறி வினவே" (தொல். மரபியல்.32:1)

"மக்கள் தாமே ஆறறி வுயிரே" (தொல். மரபியல்.33:1)

என்ற தொல்காப்பிய நூற்பாக்களினூடாக அறிந்து கொள்ளலாம்.

இந்தவகையில் மனிதனைப் பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவனவற்றுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவது கல்வி அறிவேயாகும். இந்த அறிவு நிலையினைப் பழங்காலம் முதற்கொண்டு இலக்கியங்கள் மிகுதிப்படுத்திக் கூறியுள்ளன. மணிமேகலையில் அறவணவடிகள் தம்மைப் பணிந்து வணங்குபவரை "அறிவு உண்டாகுக" (மணிமேகலை.24:93) என வாழ்த்தியுள்ளார். தமிழிலக்கியங்கள் அறிவினைப் பெறுவதற்கான அடிப்படையாகக் கல்வியினையே கருதியிருந்தன என்பதனை,

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (குறள். 396)

என்ற குறளின் வாயிலாக அறியலாம். இவ்வாறான நூல்களைக் கற்று அறத்தின் வழி வாழ்க்கை நடத்துதலையே கல்வியின் பயன் என்பதையும் அற இலக்கியங்கள் வலியுறுத்தியிருந்தன என்பதற்கு "கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற குறளடி சான்றாகும். இவ்வாறான அறிவு வளத்தைப் பெற்று அறநெறியில் வாழ்பவனின் செயற்பாடுகளை வள்ளுவர்,

"அன்புஅறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு" (குறள். 513)

என்ற குறளில் வரிசைப்படுத்தியுள்ளார். கல்வி அறிவினைப் பெற்ற ஒருவன் பண்புடைய வனாக விளங்கினால், அவன் எந்தச் சமூகத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் எல்லோரா லும் மதிக்கப்படுவான் என்பதனையும் அவன் தான் கற்ற கல்வியினால் சிறப்பு நிலையினை அடையப் பெறுவதனையும் இவ்வாறான புகழுக்குரிய நிலையைப் பெறுவதற்கு அவனுக்கு வயது ஓர் அளவுகோலாக அமையாது என்பதும் அற இலக்கியங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தன. சான்றாக,

"திரியழல் காணில் தொழுப விறகின்
எரியழல் காணின் இகழ்ப - ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமை பாராட்டும் உலகு" (நான்மணி. 66)

என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தமையால் தமிழக மக்களின் வாழ்வியலில் உயர் வர்க்கத்தினர், தாழ்ந்த வர்க்கத்தினர் என்ற சாதிப் பாகுபாடு நிலவியிருந்தது. ஆனால் கல்வி அறிவு, சமூகத்தின் அளவுகோலாக உணரப்படுகின்ற போது இவ்வாறான வருண வேறுபாடுகள் புறந்தள்ளப்பட்டு கற்றவர், கல்லாதவர் என்னும் இரண்டு பிரிவுகளே சமூகத்தில் முக்கியம் பெற்றிருந்தமையினை அற இலக்கியங்களினூடாகக் கண்டு கொள்ளலாம்.

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்றிகழார் - காணாய்
அவன்துணை யாஆறுபோ யற்றே நூல் கற்ற
மகன்துணையா நல்ல கொளல்" (நாலடி. 136)

இந்தப் பாடலில், கல்விக்குச் சமூகம் அளித்த மதிப்பும், கல்வியால் சமூகம் அடைந்த மாற்றங்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

கல்வியினால் கிடைக்கப் பெறுகின்ற சமூக மதிப்பீட்டினைக் கருதிப் போலும் தொல்காப்பியரும் பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டினை அடைவதற்கான நிலைக்களன் களில் ஒன்றாகக் கல்வியினைக் குறிப்பிட்டுள்ளார். சான்றாக,

"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" (தொல். பொருள். மெய்.09)

என்ற நூற்பாவினைக் குறிப்பிடலாம்.

**கல்லாமையின் இழிவு**

நாகரிக காலத்திற்கு முன்பே சமூகத்தில் கல்விச் செயற்பாடுகள் நிலவியமையை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அந்தவகையில் மனித இனம் நாகரிகம் அடைவதற்கு முந்தைய நிலையில், மந்திரம், சடங்கு என்பனவற்றைக் கற்றறிதலே கல்வியாகக் கருதப் பட்டிருந்தது. மக்கள் நாகரிகம் அடையத் தொடங்கிய பின்னர், அவர்களைச் சமூகத்திற்குப் பயன்படுபவர்களாக மாற்றுவதே கல்வியாகக் கருதப்பட்டிருந்தது. இந்நிலையிலே கல்வி சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தமையினால், அற இலக்கியங்கள் கல்லாமையின் இழிநிலையினை எடுத்துக் கூறி கல்வி அறிவைப் பெறுவதன் அவசியத்தை வலியுறுத்தி யுள்ளன என்பதனை,

"தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு" (நான்மணிக்கடிகை. 20)

"திருவின் திறலுடைய தில்லை - ஒருவற்கு
கற்றலின் வாய்த்த பிறவில்லை" (நான்மணிக்கடிகை. 32)

என்ற பாடலடிகளினூடாக அறியலாம். வள்ளுவரும், கல்லாதவரைப் "பயனில்லாக் களர் நிலத்திற்கே" உவமையாகக் கூறியுள்ளார். சான்றாக,

"உளரெனும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்" (குறள். 406)

இக் குறட்பாவில் கல்வியின் பயன்பாட்டையும், கல்லாமையின் தீமையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

## நிறைவுரை

வணிகமயப்படுத்தப்பட்ட இன்றைய கல்விச் சூழல், மனிதனை உயிருள்ள இயந்திரங்களாக்கி மனித மனத்தின் பசுமைகளை உலரச் செய்துள்ளது. தனிமனித மேம்பாடு என்ற பெயரில் கல்விச் செயற்பாடுகள் விற்பனைக்குரிய பொருளாக மாற்றம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு மாறாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மனித குல மேம்பாட்டின் அவசியத்தை தமிழர்கள் உணர்ந்திருந்தனர் என்பதனை அற இலக்கியங்கள் வெளிப்படுத்தும் கல்விச் சிந்தனைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். மனித ஆற்றல்கள் பலவாயினும் அறிவு, ஆன்மிகம், ஒழுக்கம், மனக்கட்டுப்பாடு ஆகியவையே தனிமனித மேம்பாட்டிற்கு அடிப்படையான விடயங்களென அறநூல்கள் குறிப்பிட்டுள்ளன.

## உசாத்துணை நூல்கள்


1. அறவாணன். க.ப.. (1992). தமிழ் இலக்கியச் சமூகவியல். தமிழ்க் கோட்டம். புதுச்சேரி.
2. ஆருர்தாஸ். 2008. திருக்குறள் அகராதி. மணிவாசகர் பதிப்பகம். சென்னை.
3. கௌமாரீஸ்வரி. எஸ். 2009. பதினெண்கீழ்கணக்கு நூல்கள் மூலமும் உரையும். மஞ்சு ஆப்செட் பிரண்டர்ஸ். திருநெல்லிக்கேணி. சென்னை.
4. சண்முகலிங்கன்.என்.. (ப.ஆ) (1975). கல்வித்தத்துவம். பண்பாட்டலுவல்கள் திணைக்களம். வடக்கு மாகாணம்.
5. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும். 2009. சாரதா பதிப்பகம். சென்னை.
6. தமிழமுது. இ. 2014. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். ஆப்செட் பிரிண்டர்சு. இராயப்பேட்டை. சென்னை.
7. சேவியர் தனிநாயகம் அடிகளார். (2009). பண்டைத்தமிழ் சமூகத்தில் கல்வி. வைகை பிறின்டேர்ஸ். சென்னை.
8. திலகர். கு. 2018. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தமிழர் வாழ்வியல். பாரதிதாசன் பல்கலைக்கழக மாநிலக் கருத்தரங்கு.
9. வடிவேலு.எஸ். கல்வி உலகம் இன்றும் நாளையும்